மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : ஆம். கும்பகோணத்தில், எள்ளுக்குட்டை பகுதி என வழங்கப்படுகிற 166 எக்கர் பரப்பளவுள்ள நன்செய் நிலம் காவிரி ஆற்று நீர்க்கசிவாலும், ஓதநீராலும் வடிகால் வசதி இல்லாததாலும் பாதிக்கப்பட்டுள்ளது. முற்பகல் 9–30

திரு. நா. காசிராமன் : இந்த நிலங்கள் பாதிக்கப்பட்டதற்குக் காரணம் அவைகளுக்கு வடிகாலாகப் பயன்பட்டு வந்த வாய்க்கால் தூர்ந்து போய் விட்டது. அதில் ரிவெட்மெண்ட் கட்டவேண்டுமென்று கேட்டு அந்த நகரசபை ரூ. 1,40,000 சர்க்காருக்கு கட்டி மூன்று ஆண்டுகளாகியும் இந்த வேலை முடிவுபெருமலிருப்பதால் நீர்த்தேக்கம் ஏற்பட்டு உணவு உற்பத்திப் பாதிப்பும் ஏற்பட்டிருக்கிறது. இதற்கு விரைவில் முடிவு காண அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : காவிரி ஆற்று நீர்க் கசிவையும், ஓத நீரையும் வெளியேற்றுவதற்காக மேற்படி செயற் குறிப்பில் வகை செய்யப்பட்டுள்ளது. 3,200 அடியில் இதுவரை 1,970 அடி நீளத்திற்கு தேப்பெருமாநல்லூர் வேலை முடிவுற்றிருக்கிறது. 30—9—69க் குள் வேலை பூர்த்தியாகிவிடும்.

பேட்டைவாய்த் தலையருகிலுள்ள பாலம்

* 125—வினு : **திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருச்சி-கரூர் நெடுஞ்சாலையில் பேட்டைவாய்த் தலைக்கு மேல் புறம் உள்ள பாலம் போக்குவரத்திற்கு இடையூருக இருந்து வருவது பற்றி அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டதா ?

(இ) ஆம் எனில், அதை மாற்றி அமைக்கும் செயற்குறிப்பு ஏதே னும் அரசின் பரிசீலனையிலுள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :

(அ) ஆம். திருச்சி, கரூர் நெடுஞ்சாலையில் பேட்டைவாய்த்தலைக்கு அருகில் உள்ள குறுகிய பாலத்தை விரிவுபடுத்தும் வேலைக்கு நிதி ஒதுக்குமாறு அரசினருக்கு பரிந்துரைத்து, வடதிருச்சி மாவட்ட வளர்ச்சி மன்றம் 26—8—67 தேதி அன்று நடந்த கூட்டத்தில் ஒரு தீர்மானம், நிறைவேற்றியுள்ளது.

(இ) தற்போது நிதி நிலை நெருக்கடி காரணமாக, மேற்படி பாலத்தை அகலப்படுத்தும் செயற்குறிப்பு ஏதும் இல்லை. ஆயினும் எதிர்கால திட்டங்களில் மேற்படி வேலை எடுத்துக்கொள்ளப்படும்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மேற்படி பாலத்தில் இரு பக்கங் களிலும் இரண்டு கோவில்கள் இருப்பதாகவும் ஆகவே அந்தக் கோவில் களை அகற்றக்கூடாது என்று பக்தர்கள் எதிர்ப்பு தெரிவித்ததாகவும் அரசுக்கு ஏதாவது செய்திவந்ததா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அதுபற்றிய தகவல் ஒன்றும் தற்போது இல்லை.

Breach in Grand Anicut Canal.

* 126 *Q.*—THIRU K. VINAYAKAM :
THIRU A. M. RAJA :
THIRU K. CHEEMAICHAMY : } Will the Hon. the Minister for Public Works be pleased to state :

(*a*) whether it is a fact that a breach has occurred in the Grand Anicut Canal about three miles east of Budalur;

(*b*) if so, the extent of breach;

(*c*) the extent of damage suffered by the Government as well as agriculturists; and

(*d*) whether the breach was closed, if so, when?

மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக் பாட்சா :

(அ) ஆம். 1967 ஆகஸ்ட் திங்கள் 9-ம் நாள் காலையில் கல்லணை தலைமைக் கால்வாயில் 8/70—8/71 தொலைவில் உடைப்பு ஏற்பட்டது.

(இ) இந்த உடைப்பு 50 அடி அகலமும் 25 அடி ஆழமும் உடைய தாக இருந்தது.

(உ) உடைப்பின் காரணமாக பயிர்களுக்கோ பிற சொத்துகளுக்கோ சேதம் எதும் ஏற்படவில்லை. இந்த உடைப்பை அடைப்பதற்கு ரூபாய் 32,800 செலவாகியுள்ளது.

(எ) இந்த உடைப்பு 16—8—67 அன்று மூடப்பட்டு அத் தேதி முதற்கொண்டே நீர் விடப்பட்டது.

THIRU K. VINAYAKAM : Sir, may I know why there was such an inordinate delay in repairing that breach? Also, is it not a fact that a lot of agriculturists were put to immeasurable difficulties when their fields were submerged by the overflowing water?

THE HON. THIRU S. J. SADIQ PASHA : It is not correct to state that there was inordinate delay. It is not also correct to state that the agriculturists had experienced difficulties.

திரு. ஏ. எம். இராஜா : பொதுவாக கால்வாய்கள் அனைத்தும் வெட்டப்பட்ட நாளிலிருந்து இன்றையதினம் வரையில் சரியானபடி தூர் எடுக்கப்படாமல் கரைகள் சரிவர பழுது பார்க்கப்படாமல் இருப்பதினால் தான் உடைப்புகள் ஏற்படுகின்றன. ஆகவே பழைய வாய்க்கால்கள் அனைத்தையும் உடனடியாக பழுது பார்க்க அரசு நடவடிக்கைகள் எடுக்குமா ?

THE HON. THIRU S. J. SADIQ PASHA : In March 1968 the Government approved the proposal of the Chief Engineer for the improvement works in the Cauveri and Grand Anicut Canal System and sanctioned an expenditure not exceeding Rs. 66.48 lakhs on a phased programme of four years.

திரு. நா. காசிராமன் : ஒவ்வொரு வருடமும் விவசாய வேலைகள் ஆரம்பிக்கும் காலம் ஜூலை, ஆகஸ்ட் மாதங்களில்தான், ஆற்றில் புது வெள்ளம் வரும்போது கல்லணைக் கால்வாய் பகுதிகளில் அல்லது கல்லணைப் பக்கம் உடைப்புகள் ஏற்படுகின்றன. 1961-ம் ஆண்டு கல்லணை யில் உடைப்பு ஏற்பட்டு தஞ்சை ஜில்லாவில் பெருத்த சேதம் ஏற்பட்டது. ஆகவே, ஜூலை, ஆகஸ்ட் மாதங்களில் வெள்ளம் வருகிற சமயங்களில் கல்லணைப் பகுதிகளில் அதிகமான காவல் போட்டு இனி இம்மாதிரி சங்கடங்கள் ஏற்படாமல் பாதுகாக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக் பாட்சா : உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதுபோல் விசேஷ அக்கறை எடுத்துக் கொள்ளப்படும்.

THIRU K. VINAYAKAM : Sir, are the Government in receipt of the report containing the recommendations made by the Estimates Committee headed by Thiru Ramachandran which inspected this area when the breach took place? Also, are the Government aware of the fact that machinery like lifters, bulldozers, etc., could not be made available to effect repairs immediately? So, what steps have the Government taken to see that this kind of delay does not occur at least in future?

THE HON. THIRU S. J. SADIQ PASHA : My hon. friend may put a separate question.

கிராம வளர்ச்சி இணை இயக்குநர் பதவி

*127 வினா—திரு. வி. கே. கோதண்டராமன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) **Rural Development Joint Director** பதவியில் இது வரையில் ஐ.ஏ.எஸ். அதிகாரிகளை நியமிக்கப்பட்டு வந்ததற்குப் பதிலாக இப்போது ஐ.ஏ.எஸ். அல்லாத ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளது உண்மையா ?

(இ) ஆம் எனில், அதற்கான காரணம் யாது ?

மாண்புமிகு திரு மா. முத்துசாமி : (அ) கிராம வளர்ச்சி இயக்குநர் அலுவலகத்தில் ஐ.ஏ.எஸ். அதிகாரி பதவியான இணை இயக்குநர் பதவிக்கு ஐ.ஏ.எஸ். அல்லாத எவரும் நியமிக்கப்படவில்லை. ஆனால் இவ்வலுவலகத்தில் துணை இயக்குநர் (கல்வித் தொடர்பு) அவர்கள் இணை இயக்குநராக நியமிக்கப்பட்டுள்ளார். இவர் கல்வித் தொடர்பான காரியங்களை மட்டுமே கவனிப்பவராவார். முழுத்துறைக்கும் இணை இயக்குநராக பணியாற்றிய ஐ.ஏ.எஸ். அதிகாரி இடம் காலியாகவே உள்ளது. அதனில் யாரும் நியமிக்கப்படவில்லை.

(இ) இந்த வினா எழவில்லை.

திரு. வி. கே. கோதண்டராமன் : எவ்வளவு நாட்களாக அது காலியாக இருக்கிறது ? அந்தக் காலி ஸ்தானத்தில் இதுவரை யாரும் நியமிக்கப்படாமல் இருப்பதற்கான காரணங்கள் என்ன ?

மாண்புமிகு திரு மா. முத்துசாமி : திரு. கா. திரவியம் அவர்கள் கிராம வளர்ச்சி இயக்குநராக பதவியில் இருந்தபோது கிராம வளர்ச்சி இயக்குநர் அலுவலகத்தில் இணை இயக்குநராக திருமதி சத்தியபாமா அவர்கள் பதவி வகித்து வந்தார்கள். பிறகு அவர்கள் உணவுப் பொருள் வழங்கும் துறைக்கு மாற்றப்பட்டு விட்டார். இந்தப் பதவியில் எவரும் நியமிக்கப்படவில்லை. இந்த வேலையைக் கவனித்து வருவதற்கு ஒரு ஐ.ஏ.எஸ். அதிகாரி—டைரக்டர் ஆஃப் ரூரல் டெவலப்மென்ட்—இருப்பதால் இந்த இடம் இதுவரை பூர்த்தி செய்யப்படவில்லை.

திரு. எஸ். இராமச்சந்திரன் : கல்வித்துறையில் பல சீனியர் அதிகாரிகள் இருக்க இவர் மட்டும் இந்த இலாகாவிற்கு அழைக்கப்பட்டு பதவி உயர்வு கொடுக்கப்பட்டதன் காரணம் என்ன ? இவருக்கு ஐ.ஏ.எஸ். சிபார்சு செய்யப்பட்டிருப்பதாக சொல்லப்படுகிறதே, அது உண்மையா ?

மாண்புமிகு திரு மா. முத்துசாமி : கல்விப் பிரிவிற்கு துணைத் இயக்குநராக இருக்கும் வெங்கடசுப்பிரமணியம் என்பவர் கோவை கோட்ட கல்வி அதிகாரியாக இருந்தவர். இந்தப் பதவிக்கு இவர் நியமிக்கப்பட்டதினால் அவர்களுக்கு எந்தவிதமான சம்பள மாற்றமும் ஏற்படுத்தித் தரவில்லை. ஏற்கெனவே அவர் ஆயிரம் ரூபாய் சம்பளம் வாங்குகிற காரணத்தினால் அந்தப் பதவி இணை இயக்குநர் பதவியாக மாற்றப்பட்டு, இணை இயக்குநரின் சம்பளத்தை அவர் ஏற்கெனவே பெற்றுவருவதால் அந்தப் பொறுப்பை அவர்களிடம் ஒப்படைத்தால் சில அதிகாரங்களை வழங்க முடியும், வேலைப் பளுவையும் குறைக்க முடியும் என்று கொடுக்கப்